**சார்பு நீதிமன்றம், இராமநாதபுரம்.**
**OS No. 57/2012**

**DW.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **முகைதீன் இப்ராகிம் உம்மா** | **ஊர்** | : | |
| **த/பெ** | : | | **வட்டம்** | : | |
| **தொழில்** | : | | **மாவட்டம்** | : | |
| **வயது** | : | | **ஜாதி** | : | |

**தேதி: 23.06.2025.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

தாவா சொத்து வாதிகளுக்கு எப்படி பாத்தியம் என்பதை வாதிகள் பிராதில் சொல்லியுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து வாதியின் முன்னவர்களுக்கு எந்தெந்த ஆவணங்களின்படி பாத்தியம் என்பதை குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிர் வழககுரையில் சொல்லியுள்ள 24.12.1954 ம் ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு கிழக்கில் உள்ள சொத்தினை வாதியின் முன்னவர்கள் 17.10.1947, 10.05.1948, 24.12.1954 ஆகிய ஆவணங்களின்படி கிரையம் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணங்களில் கண்ட கிரையங்கள் பற்றி எனக்கு தெரியும் என்றும், மேற்படி ஆவணங்களில் கண்ட சொத்து தாவா சொத்திற்கு கிழக்கில் கண்ட சொத்து என்பதால் மேற்படி ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கிழக்கில் கண்ட சொத்து சம்மந்தமாக அ.வ.எண்.110/1983 வழக்கு நடந்து வந்த விவரமும்,அது தள்ளுபடி செய்யப்பட்ட விவரமும் எனக்கு தெரியும்

என்றும், ஒத்து கொண்டால் பாதகமாக அமையும் என்பதால் அந்த விவரம் பற்றி தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் தவறு. தாவா சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததால் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிர்வழககுரையில் சொல்லாத விவரங்களை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதும் ஏற்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. 4 முதல் 8 பிரதிவாதிகள் பாத்தியம் கோரும் இப்ராகிம் உம்மாள் என்பவருக்கோ அவரது தகப்பனார் முகம்மது சதக் என்பவருக்கோ தாவா சொத்துக்களில் எந்தவித பாத்தியமும் அனுபவமும் கிடையாது என்றால் பாத்தியம் இருக்கிறது. பாத்தியம் இருப்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் முகம்மது சதக்கிற்கும் முகைதீன் இப்ராகிம் உம்மாளின் வாரிசுகளுக்கும் பாத்தியம் இருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு கிழக்கில் உள்ள சொத்தினை முகைதீன் இப்ராகிம் உம்மாளுடைய பங்கு சொத்தினை அவரது கணவரும் மகன்களும் கிரையம் கொடுத்துவிட்டநிலையில் தற்போது தங்களுக்கு பாத்தியம் இருப்பதாக சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல. தாவா சர்வே எண்ணில் கண்ட சொத்திற்கோ, தாவா சொத்தின் நான்குமால்களில் கண்ட சொத்திற்கோ எந்தவித பாத்தியமோ உரிமையோ அனுபவமோ முகைதீன் இப்ராகிம் உம்மாளின் வாரிசுகளுக்கோ முகம்மது சதக் என்பவருக்கோ கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளுக்கும் அவரது முன்னோர்களுக்கும் பிராதில் கூறியுள்ளபடி பாத்தியமான சொத்து என்றும் மேற்படி தாவா சொத்து 4 முதல் 8 பிரதிவாதிகளுக்கு பாத்தியமும் அனுபவமும் இல்லை என்றும், தாவா சொத்து முகம்மது சதக்

என்பவருக்கு பாத்தியமாக இருந்து, அதன்படிக்கு அவருடைய மகளான முகைதீன் இப்ராகிம் உம்மாளுக்கு பாத்தியமாக இருந்து அவர் மூலமாக 4 முதல் 8 பிரதிவாதிகளுக்கு பாத்தியமான சொத்து என்று பொய்யாக எதிர்வழக்குரை தாக்கல் செய்து சாட்சியமும் அளிக்கிறேன் என்றால் தவறு. முகம்மது சதக் என்பவரின் வாரிசு விவரங்களை தவறுதலாக காட்டியும் முகைதீன் இப்ராகிம் உம்மாளுடைய உண்மையான வாரிசு விவரங்களை மறைத்தும் தாவா சொத்தில் பொய் பாத்தியம் கோரி எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரை சொல்லியுள்ளதுபோல் எந்த பங்கு பாத்தியமும் இல்லை என்று சொன்னால் தவறு. பிராதில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**ஒம்/– திருமதி. எம். அகிலா தேவி, எம்.எல்.,**
**சார்பு நீதிபதி, இராமநாதபுரம்.**